**S.T.C.311 /2021** **10.04.2022**

**வா.சா.1.கொடிசந்திரசேகரன்**

**முதல் விசாரணை:**

நான் இந்த புகாரில் புகார்தாரர். எனது முதல் விசாரணையை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். கடந்த 17.05.2021 ஆம் தேதியில் காசோலை எண்.498838 எழுதி எதிரி என்னிடம் கொடுத்த காசோலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1.** மேற்படி காசோலையை நான் எனது வங்கியான செக்கானூரணியில் உள்ள இந்தியன் வங்கியில் கடந்த 17.05.2021 ஆம் தேதியில் வசூலுக்கு போட்டேன். வசூலுக்கு போட்ட ரசீது **வா.சா.ஆ.2.** மேற்படி எனது இந்தியன் வங்கியான நாகமலைபுதுக்கோட்டை கிளையிலிருந்து எனக்கு கடந்த 19.05.2021 ஆம் தேதி அன்று ஒரு மெமோ கொடுக்கப்பட்டது. அந்த மெமோவின் நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.3.** கடந்த 30.05.2021 ஆம் தேதியில் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ரிட்டன் ஆகி எனக்கு திருப்ப அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பு கவரின் நகல் **வா.சா.ஆ.4.** மேலும் 15.06.2021 ஆம் தேதி மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பினேன். அந்த அறிவிப்பின் நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5.** மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டது குறித்து தபால் துறையால் கொடுக்கப்பட்ட அஞ்சல அட்டையை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6.** கடந்த 21.06.2021 ஆம் தேதியில் எதிரியானவர் பதில் அறிவிப்பு எனக்கு அனுப்பியிருந்தார். அந்த அறிவிப்பின் நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.7.** கடந்த 17.02.2021 ஆம் தேதியில் புகார்தாரருடைய மனைவி அவருடைய நகை அடகு வைத்த ரசீதின் நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.8.** எதிரியின் பெனிட்டன்கோ என்ற கடையின் வெளிதோற்ற புகைப்படத்தின் நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.9.**